# கிளிநொச்சி மாவட்ட இந்து நிறுவனங்களின் பணிகள் : கரைச்சி பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு.

**k.கோமினா**[1]

[1]தற்காலிக உதவி விரிவுரையாளர், இந்துநாகரிகம், மொழித்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

nishaseu512@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் வட மாகாணத்தில் பழம்பெரும் நகரமாக விளங்கும் கிளிநொச்சி நிர்வாகத் தலையிடமாக விளங்குகிறது. பல்லின மக்களைக் கொண்டும் இந்துக்களே அதிகமாக வாழ்ந்தும் வருகின்றனர். இவர்களது பண்பாடுகள், கலாசார விழுமியங்கள், அதனையொட்டிய நிறுவனங்கள் என்பன இந்துப் பாரம்பரியத்தை வெளிக்காட்டுவனவாக உள்ளன.கிளிநொச்சி மாவட்டம் நான்கு பிரதேச பிரிவுகளைக் கொண்டிருந்தாலும் கரைச்சி பிரதேசத்திலேதான் அதிகபடியான இந்துக்கள் செறிந்து வாழ்கின்றனர். இங்குள்ள மக்களின் கலாசாரம் பேணப்படும் ஒன்றாகக் காணப்படுகின்றது. அதற்கேற்ப சமூகத்தில் பல மக்கள் பிரதிகளுடன் கூடிய அமைப்புக்கள் ஆரம்பகாலந்தொட்டு அமைப்புக்கள் ஆரம்பகாலந்தொட்டு இன்றுவரை அடியெடுத்து வைத்துள்ளன. இவை இந்து நிறுவனங்களாக தமது சமய, சமூகப் பணிகளில் பங்கெடுத்து வருகின்றன.பொதுவாக இந்து நிறுவனங்கள் என்று பார்க்கும் போது அவை பல்வேறு கோணங்களில் பணிகளை ஆற்றுகின்றன. இப்பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத இந்து நிறுவனங்களும் எவ்வித பாகுபாடுமின்றி மக்களுக்காகவும் மதத்திற்காகவும் தமது பணிகளை ஆற்றி வருகின்றன என்றே கூறலாம். குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியோர்கள், வலுவிழந்தோர் மற்றும் அநாதைகள் என அனைவருக்கும் சேவை செய்கின்றன. அதுமட்டுமன்றி அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், ஆலய ரீதியிலான சமயப்பணிகளை மேற்கொள்ளல், கல்வி, பொருளாதாரப் பணிகள் எனக் கூறிக்கொண்டே போகமுடியும். யுத்த சூழ்நிலையின் பின்னரான மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் இவற்றின் பணிகளில் முன்னைய காலங்களினை விட பல மாற்றங்களை அவதானிக்க முடிகிறது. இந்து நிறுவனங்கள் தொடர்பாகவும் அவற்றின் பணிகள் தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கிளிநொச்சி மாவட்டத்தில் இத்தகைய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது.அந்தவகையில் கரைச்சி பிரதேசத்தில் உள்ள நிறுவனங்களில் மகாதேவ ஆச்சிரமம், திருநெறிக்கழகம், யோகர் சுவாமிகள் திருவடி நிலையம், சைவ மங்கையர் கழகம் போன்ற பல நிறுவனங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. இதன்பிரகாரம் கரைச்சி பிரதேசத்தில் உள்ள இந்து நிறுவனங்களை அடையாளப்படுத்தி, அவை ஆற்றும் பணிகளை ஆராய்ந்து அதற்கூடாக இவற்றின் பணிகளையும் இப்பிரதேச இந்துப் பண்பாட்டையும் அதன் தன்மையையும் வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. ஆய்வு நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு விளக்கமுறை, சமூகவியல் மற்றும் வரலாற்று ரீதியிலான பண்புசார் ஆய்வுமுறைகள் கையாளப்பட்டுள்ளன. அத்துடன் களவாய்வின் மூலமான வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம் ஊடாகப் பெறப்படும் தரவுகள் முதலாம் நிலைத் தரவுகளாகவும் புத்தகங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்தள தரவுகள் மற்றும் பிற ஆவணங்கள் மூலம் பெறப்படும் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் அமைகின்றன.இறுதியாக இவ்வாய்வானது கரைச்சி பிரதேசத்தில் இந்து நிறுவனங்களது சமய, சமூகப் பணிகளை எடுத்துக்கூறி அதனோடு ஒன்றிய தற்கால மாறுதல்களையும் அதற்கான காரணங்களை அடையாளப்படுத்துவதும் இவ்வாய்வின் முடிவாக அமையும்.

**பிரதான சொற்கள்:** இந்து நிறுவனங்கள், பண்பாடு, பணிகள்

## அறிமுகம்

சனாதன தர்மமாகக் காணப்படும் இந்துமதம் பல பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்தவகையில் அது ஒரு வாழ்வியல் நெறியாகச் சிறப்பிடம் பெறுகின்றது. மனித வாழ்வில் இடம்பெறும் சமூக நிறுவனங்களில் சமயம் முதன்மையானதாகும். பாரதம் முழுவதும் படர்ந்து பயின்று வரும் இந்துமதம் பலவகைப்பட்ட தெய்வங்களைக் கூறுவதெனினும் உண்மையில் ஒரு தெய்வக் கோட்பாடுடையதாய் பரந்த நோக்கும் ஈடிணையற்ற ஒருமைப்பாடு கொண்டதாயும் விளங்குகிறது. உலகில் பெருமளவில் கடைப்பிடிக்கப்படும் மதமாக மட்டுமல்லாமல் அதன் பண்பாடு எல்லோரையும் ஈர்க்கப்பட வைக்கிறது. ஈழத்தில் இந்துக்கள் வாழும் இடங்களில் வடமாகாணம் முக்கியமான இடத்தைக் கொண்டிருக்கின்றது. இங்கு இந்துக்களின் பெரும்பான்மையைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் இந்துமதம் பல அமைப்புக்களை கொண்டு விளங்குகின்றது. இவற்றை சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் என இரண்டாக அவதானிக்கலாம். இதனை கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்பட்ட 'கரைஎழில்' என்ற வருடாந்த இதழிலும் 'தொன்மையின் மூலங்கள்' என்ற நூலிலும் வெளியான கட்டுரைகள் விளக்குவதாய் அமைகின்றன.

கிளிநொச்சி இலங்கை குடியரசு யாப்பின் ஏழாவது திருத்தம் மூலம் 1983 செப்ரெம்பரில் உருவாக்கப்பட்டு 1984 பெப்ரவரியில் இருந்து தனி மாவட்டமாகச் செயற்பட்டு வருகிறது. காலச் சூழ்நிலையால் இங்குள்ள மக்கள் அனைவரும் 2009 ஆம் ஆண்டு முழுமையாக மாவட்டத்தை விட்டு இடம்பெயர்ந்து மீண்டும் படிப்படியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். நிர்வாக வேலைகளுக்காக 04 பிரதேச செயலாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி போன்றனவாகும்.1970களின் பின்னர்

இலங்கைத் தொல்லியற் திணைக்களம் இலங்கையின் முதன்மைத் தொல்லியலாளர்களில் ஒருவரான கலாநிதி சிரான்தெரணியகல கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைமடுப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வுகள் இப்பிரதேச பூர்வீக மக்களையும் அவர்கள்தம் பண்பாட்டையும் எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன. இதனை ''கிளிநொச்சி மாவட்டத்தின் பூர்வீக மக்களும் பண்பாடும் - தொல்லியல் வரலாற்று நோக்கு''தலைப்பில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் எழுதிய கட்டுரை தெளிவுபடுத்துவதாய் அமைகிறது.

சமூகத்தில் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நிறுவன ரீதியான அமைப்புகள் முக்கியமானவையாகும். அவை சமய, சமூக, கல்வி மற்றும் ஏனைய தொழில் ரீதியானதாக இருந்தாலும் சரி ஒரு கட்டமைப்பான கோப்பிற்குள் செயற்பட நிறுவனங்கள் வழிவகுக்கின்றன. இவற்றுள் திருநெறிக்கழகம், மகாதேவ ஆச்சிரமம்,யோகர் சுவாமிகள் திருவடி நிலையம்,சைவ மங்கையர் கழகம் போன்றன குறிப்பிடத்தக்கன. அறநெறிப் பாடசாலைகளையும் இனங்காண முடிகிறது. கிளிநொச்சி நகரம் உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்து இங்கு வாழ்ந்த சில பெரியார்களாலும் மக்களின் ஒத்துழைப்புடனும் ஒவ்வொரு நிறுவனங்களும் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் ஆலயங்களில், வீடுகளில் என தொடங்கி படிப்படியாக அவை தமக்கென தனியான கட்டடங்களை பெற்றுள்ளன. இவ்வண்ணம் இத்தகைய இந்து நிறுவனங்கள் பல மாற்றங்களுக்கு மத்தியிலும் இன்று மக்களுக்கு பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றன. எனவே இத்தகைய பணிகளை எடுத்தாளும் முகமாக இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**இந்து நிறுவனங்களின் பணிகள்**

**1.0. சமய நிறுவனங்கள்**

சமூகத்தில் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நிறுவன ரீதியான அமைப்புகள் முக்கியமானவையாகும். அவை சமய, சமூக, கல்வி மற்றும் ஏனைய தொழில் ரீதியானதாக இருந்தாலும் சரி ஒரு கட்டமைப்பான கோப்பிற்குள் செயற்பட நிறுவனங்கள் வழிவகுக்கின்றன. அவற்றில் இங்கு சிலவற்றை எடுத்து நோக்குவது எடுப்பானதாக உள்ளது.

| இல | திகதி | நிறுவனங்கள் பெயர் | இடம் |
|---|---|---|---|
| 1 | 1980.11.25 | மாகாதேவாஆச்சிரம் | ஜெயந்திநகர் |
| 2 | 1981.12.30 | குருகுலம் மாகாதேவாஆச்சிரமசிறுவர் இல்லம் | ஜெயந்திநகர் |
| 3 | 1990.03.21 | இந்து இளைஞர் மளிதவளமன்றம் | ஸ்கந்தபுரம் |
| 4 | | திருநெறிக்கழகம் | திருநகர் |
| 5 | 1999.05.10 | யோகர் சுவாமிகள் திருவடிநிலையம் | வன்னேரிக்குளம் |
| 6 | 2006.10.16 | கிளிநொச்சிமாவட்டசைவமங்கையர்கழகம் | கிளிநகர் |
| 7 | 2008.05.03 | மாகாதேவாஆச்சிரமசைவச் சிறுவர் இல்லம் | உருத்திரபுரம் |
| 8 | 2014.02.24 | செஞ்சோலைசிறுவர் இல்லம் | திருவையாறு |
| 9 | | மேல்மருவத்தூர் ஆதிபராசக்திவழிபாட்டுமன்றம் | கணேசபுரம் |
| 10 | 2017.08.01 | கிளிநொச்சிமாவட்டஅந்தணா் ஒன்றியம் | கிளிநகர் |
| 11 | 2017.10.17 | பராசக்திஆன்மீககல்விவளர்ச்சிமன்றம் திருநெறிக்கழகம் | கிளிநகர் |

அட்டவணை – 1

**1.1. திருநெறிக்கழகம்**

கிளிநொச்சியில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக சைவப்பணியாற்றிய ஒரு நிறுவனமாக திருநெறிக்கழகம் காணப்படுகின்றது. 20ம் நூற்றாண்டு வரை இம்மாவட்டம் காடாகவே இருந்தது. மக்கள் பெரும்பாலும் நிரந்தரமாக தங்காமல் தமது தேவைகளுக்கு மாத்திரம் வந்து சென்றனர். இதனையடுத்து 1950களில்

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த திரு.ம.ஸ்ரீகாந்தா யாழ்ப்பாணத்தில் இருந்து பல இடைஞ்சல்களுக்கு மத்தியில் அங்குள்ள மக்களைப் படிப்படியாகக் கிளிநொச்சிக்கு கொண்டு வந்து சேர்த்தார். இரணைமடுக்குள நீரைப்பெற்று குடியானவர்கள் உருத்திரபுரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை, இராமநாதபுரம், கல்மடு, கந்தபுரம், வன்னேரிக்குளம் போன்ற இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். தம் உறவுகளோடு சந்தோசமாக வாழ்ந்திருந்த மக்களை சில காலத்திற்கு பின் துன்பம் துரத்தியது. இதனால் மக்கள் மனம் விட்டுப் பேசி நிம்மதியாய் வாழக்கூடிய கோவில்கள், இடங்கள் கிடைக்கவில்லை. பொருளாதார ரீதியில் மோசமான நிலை உருவாகியதும் மக்கள் மனம் மாறி பின்னர் இடம் மாறி விடுவர் என்ற நிலை உணரப்பட்டது.

அந்தநாட்களில் ஆன்மீக மேம்பாடுடைய சிலருடைய ஈடுபாடு இங்கு காணப்பட்டது. யோகர் சுவாமிகளோடு ஈடுபாடுடைய புகையிரத மேற்பார்வையாளர் கந்தையா அவர்களோடு வடிவேலு சுவாமிகளும் கிளிநொச்சிக்கு வந்து முருகனை வழிபடுவார். இவ்வாறு இருக்கையில் ஒருநாள் யோகர் சுவாமிகள் வடிவேலு சுவாமிகளை மருதனார்மடத்தில் சந்தித்த போது 'நீ கிளிநொச்சிக்குப் போ அங்கு உனக்கு நிறைய வேலை இருக்கு' என்று வடிவேல் சுவாமிக்கு யோகர் சுவாமிகளால் கூறப்பட்டது. வடிவேல் சுவாமிகள் கிளிநொச்சியில் தனக்கிருந்த ஈடுபாட்டோடு கிளிநொச்சிக்கு வந்தார். அக்காலங்களில் இங்கிருந்த அருள்நெறிக் கழகத்திற்கு திரு.த.நல்லதம்பி செயலாளராகவும் காணி அதிகாரி திரு.வ.கிருஸ்ணபிள்ளை தலைவராகவும் இருந்தனர்.இக்கழகம் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் இருந்தபோது வெள்ளிக்கிழமைகளில் சில உத்தியோகத்தவர்கள், விவசாயிகளுடன் இணைந்து கூட்டு வழிபாட்டில் ஈடுபட்டதை அறியமுடிகிறது. ஆரம்பத்தில் இக்கழகம் வீடுகளிலேயே இயங்கி வந்துள்ளது. இதன் பிரகாரம் வெள்ளிக்கிழமைகளில் வடிவேல் சுவாமிகள் நிகழ்த்தும் சமய பேச்சுகளும் த.நல்லதம்பி அவர்களுடைய கூட்டுவழிபாடும் மக்களைக் கவர்ந்தன.

இவ்வருள் நெறிக் கழகத்தின் செயற்பாட்டில் ஒரு பெண்ணின் பங்களிப்பும் இருந்துள்ளதென்றால் அது துறவி பரமானந்த வல்லி அம்மையாரையே சாரும். ஆரம்பத்தில் கணேசபுரம் பகுதியில் இருந்த இக்கழகச் சிந்தனையாளர்கள் அடுத்து உருத்திரபுரத்திற்கு மாறி அதனையடுத்து ஜெயந்தி நகரத் திட்டம் ஆரம்பித்ததும் அங்கு ஒரு வசதியான இடத்தில் காணி கொடுத்து ஆச்சிரமம் அமைக்கப்பட்டது. திரு. வடிவேலு சுவாமிகள், திரு. நல்லதம்பி, திரு. அம்பலவாணர், திரு. கதிர்வேலு, திரு. கணேசானந்த சுவாமிகள் ஆகியோர் சமயப் பணிக்காக என்றும் தளர்ந்து பின்னின்றதே கிடையாது. இந்த அணியினரின் கால் பதியாத இடமே இல்லை. குடியேற்ற கிராமங்களில் கூட்டுவழிபாடு நடாத்தப்பட்டது. பின்னர் அங்குள்ள இளம்வயதினர், பெண் பிள்ளைகள் எல்லோரையும் சேர்த்து கூட்டுவழிபாட்டில் ஈடுபடுத்துவர். சிறு நற்சிந்தனைச் சொற்பொழிவுகளும் வழிபாட்டின் பின் இடம்பெற்றன. அதனால் மக்கள் சைவத்தை வளர்த்தனர்.

'பண்ணோடு பாட மறந்தடியேன்' என்பதற்கிணங்க இலகுவான தேவாரம், திருவாசகம், திருவசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணங்கள் கொண்ட திருநெறிக்கழக கூட்டுவழிபாட்டுத் தொகுப்பை இக்கழகம் வெளியிட்டது. தன்வந்தர்களின் உதவியுடன் ஆயிரம் பிரதிகள் வெளியிட்டு கோவில்களில் கூட்டுவழிபாட்டை வளர்த்தனர். அத்துடன் வெள்ளிக்கிழமைகளில் ஆசாரமாக வாழ வழிவகுத்தனர். தேவையான நேரங்களில் சமய தீட்சை கொடுக்கப்பட்டதுடன் அநேகமாக ஊர்க் கோவில்கள், பாடசாலைகளிலேயே இச் செயற்பாடுகள் இடம்பெற்றன. இதில் வசதியற்ற பலரும் கலந்து தீட்சை பெற வாய்ப்புக் கிட்டியது.புதிதாக உருவான குடியேற்றங்களில் மதமாற்றம் பெரிய பிரச்சினையாக இருந்தது. சைவர்களின் சமய நம்பிக்கையை வளர்ப்பதும் சமய அறிவை ஊட்டுவதும் தான் சைவர்களைக் காக்கும் எனத் திருநெறிக்கழகம் கருதியது. இதனை நிறைவேற்றும் பொருட்டு வறுமை நிலையில் உள்ள குடும்பங்களின் கல்வி மற்றும் வாழ்வாதார உதவிகளை அதற்குரியவர்களை நாடி பெற்றுக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக உருத்திரபுரம் பகுதியில் நூற்றுக் கணக்கான ஏக்கர் காணியை பிற மதத்தினர் பிடிக்க முயன்ற போது தடுத்ததோடு அவ்விடத்தில் உள்ள எட்டாம் வாய்க்கால் பகுதிக்கு மாதாபுரம் எனப் பெயர் வைக்க முனைந்த போது அதனை எதிர்த்து வென்ற பெருமை திருநெறிக் கழகத்தையே சாரும்.

மேலும் கிறிஸ்தவர்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பியே அன்றும் இன்றும் சமயம் வளர்ப்பவர்களாகக் காணப்படுகின்றனர். அதேபோல் நாமும் பரப்புரை செய்ய வேண்டும் என இக்கழகம் எண்ணியது. முதலாவது இடமாக பாடசாலைகளைத் தெரிவுசெய்து அறிஞர்கள் சிலரை வரவழைத்து கருத்துரைகளை ஆற்றியும்

கோவில்களில் சிறப்புச் சொற்பொழிவுகளையும் நடாத்தினர். இவர்களில் இந்திய சமயப் பெரியார்களில் குன்றக்குடி அடிகள், கிருபானந்தவாரியார், சந்தானந்தபாரதி, கி.வ ஜகநாதன், சுவாமி சத்தியானந்தா போன்றோரோடு இலங்கை அறிஞர்களான ஆத்மயோதி முத்தையா, பண்டிதர் துரைசிங்கம், க.பொ இரத்தினம், வைரமுத்து பண்டிதர், செல்வி புஸ்பா செல்வநாயகம் போன்ற பலர் வரவழைக்கப்பட்டு கரைச்சி, கண்டாவளைப் பகுதிகளில் அதிர்வலைகளை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளை நடத்தினர்.

திருநெறிக்கழகத்ததினர் மக்கள் நல்ல சமய அறிவோடு வளர அயராது பாடுபட்டனர். இவ்வணியினரோடு வெளியில் இருந்த சில கிராம சேவையாளர்களும் தங்களாலான உதவிகளை செய்தனர். மகாலிங்கம், பேரம்பலம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். கரைச்சி பிரதேசத்தில் கனகபுரம் படித்த மேட்டுநிலக் குடியேற்றம் உருவாகி அங்கு முதற்பண்ணை வந்ததும் அக்காலத்தில் அரச அதிபராக இருந்த திரு.ம.ஸ்ரீகாந்த வடிவேற் சுவாமிகளைக் கொண்டு பகவத்கீதையில் கர்மயோகம் பற்றி பதினெட்டு வெள்ளிக்கிழமைகளில் வகுப்பு நடத்தி வைத்தார். மற்றும் அந்த நாட்களில் திராவிட முன்னேற்றக்கழகப் பகுத்தறிவுச் சிந்தனைகளில்ச் சிக்கி, கம்ௌனிசக் கோட்பாடுகளில் மயங்கி சமுதாய பாரம்பரிய பண்பாட்டு வழித்தடங்களில் மிகுந்து முரண்பட்ட மக்கள் பலருக்கு நல்ல வழி காட்டி வழிநடத்திய பெருமை வடிவேற் சுவாமி போன்ற சில பேரையே நினைவுபடுத்துவதாக உள்ளது. பின்பு திருநெறிக் கழகத்திற்கான நிரந்தர அமைவிடம் கிளிநொச்சி நகரின் மத்தியில் கிருஸ்ணர் கோவிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டு இன்றும் செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளமை சிறப்பிற்குரியதே.இச் செயற்பாட்டை மேற்கொண்ட திரு.நல்லதம்பி 1950களில் குடியேற்றங்களில் மக்கள் வரத்தொடங்கியதும் சமயக்கல்வி தொடர்பாகச் சிந்திக்கத் தொடங்கினார். மகாதேவ ஆச்சிரம காலத்தில் ஊர் மக்கள் உதவியுடன் திருவெம்பாவை போன்ற பல விழாக்கள் கொண்டாடும் பெரிய கூட்டங்கள் வலம்வரும் காட்சிகள் எழுத்தில் வடிக்க முடியாதவாறு உள்ளன.

மக்களின் பிரச்சனைகளைக் கண்டுபிடித்து ஆய்வு செய்த நல்லதம்பி அவர்கள் தூரநோக்கோடு திட்டமிட்டுத் தொடங்கியதுதான் கரைச்சி வித்தியா விருத்திச்சங்கம். வடகிழக்குப் பகுதியிலும் அதற்கு வெளியேயும் சைவசமயக் கல்வியை வளர்க்கத் திட்டமிட்டு நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளை நிறுவி முகாமை செய்த இந்துபோர்ட் இராசரத்தினம் கிளிநொச்சியில் முரசுமோட்டைப் பகுதியில் ஒரு பாடசாலையையே அமைத்தார். காலப்போக்கில் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம், பரந்தன் இந்து மகா வித்தியாலயம், பன்னங்கன்டி தமிழ்க்கலவன் பாடசாலை, புத்துவெட்டுவான் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளை இச்சங்கம் அமைத்து வளர்த்தது. இவற்றோடு இன்று ஜெயந்திநகர், குமரபுரம் பகுதிகளில் மீனாட்சி அம்மன் கோவில், முருகன் கோவில் என்பன அமைத்து இன்று அவை வளர்ந்த கோவில்களாக விளங்குவதற்கு இப்பிரதேச வித்தியா விருத்திச் சங்கமே வழிவகுத்தது எனலாம். நல்லதம்பியின் தேவை மனப்பாங்கு, செயற்திறன் சிந்தனைகள், சமூகநல நோக்குகள் மக்களை உதவ வைத்தன.

ஆரம்பத்தில் இருந்த பொறிக்கடவை போன்ற ஆலயங்கள் பல சங்கடங்களைச் சந்தித்த வேளை திருநெறிக்கழகத்தின் நீண்ட காலப் போராட்டத்தினால் நன்னிலைக்கு கொண்டுவரப்பட்டது. இவ்வாலயங்களில் கூட்டு வழிபாடு, சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. பின்பு பலரின் உதவியால் விரைவாக வளர்ச்சி கண்டன. இவ்வாறு இருக்கையில் திருநெறிக்கழகம் இப்போது அமைதியான முறையில் பணிகளைத் தொடர்கிறது. இன்னல், இடப்பெயர்வு எல்லாம் சந்தித்து மீண்டு சில காலம் அதற்குரிய அலுவலகக் காணியைப் பெறமுடியாமல் போராடி பெற்றுள்ளது. இன்று தனது பணிகளை இயன்றவரை சமய, சமூக, கல்வி அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

**1.2. மகாதேவ ஆச்சிரமம்**

ஆச்சிரமம் என்பது ஆகச் சிரமமானது எனப் பொருள்படும். அந்தவகையில் மகாதேவ ஆச்சிரமம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. யாழ்ப்பாணம் குமாரசாமி வீதியில் இருந்த சிவகுருநாத பீடத்தின் குரு முதல்வாரன ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் சமாதியடைந்த வேளை அவரது பிரதம சீடர்களில் ஒருவரான வடிவேல் சுவாமிகளால் அவருடைய பெயரில் அமைக்கப்பட்டதாகும். இவருக்கு பெற்றோரின் கடமை அமைந்திருந்தமையால் இக்குருநாத பீடத்தின் முதல் குரு முதல்வராக இராமலிங்க சுவாமிகளே அமர்த்தப்பட்டார். யோகர் சுவாமிகள் 'கிளிநொச்சிக்குப் போ, அங்கு உனக்கு நிறைய வேலை இருக்கு' எனக்

கூறியதன் பிரகாரம் இங்கு வந்து காலஞ்சென்ற திரு.த.நல்லதம்பி அனுசரனையுடன் 1952இல் உருவாக்கப்பட்டது.

அக்காலப்பகுதியில் டாக்டர்.அம்பலவாணர், த.நல்லதம்பி, யாழ் அதிபர் ம.ஸ்ரீகாந்தா, இ.நடராஜா(DRO),(DLO) சம்பந்தர் போன்ற சிலரது வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி ஜெயந்தி நகரில் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட ஒருவரின் பெயரில் காணி வழங்கப்படும். அங்கு ஆச்சிரமத்தை ஸ்தாபிக்குமாறு ஸ்ரீகாந்தா ஐயா கூறியுள்ளார். இதன் பிரகாரம் அந்த 26ம் இலக்க காணி திரு.த.நல்லதம்பி அவர்களின் பெயரில் 1952ம் ஆண்டு வழங்கப்பட்டு ஆச்சிரமம் அமைக்கப்பட்டு சமயப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இக்காணியை ஆச்சிரம வருங்கால நிலையை எண்ணி பெருமனதுடன் அதற்கான ஒரு கோவையுடன் அதற்கே அளித்த பெருமை திரு.த.நல்லதம்பி அவர்களையே சாரும்.

தவத்திரு வடிவேல் சுவாமியின் திருவுளத்திற்கு அமைவாக ஒரு கட்டடம் அமைத்து அக்கட்டடத்தில் நடராஜப் பெருமானைப் பிரதிட்டை செய்து நித்திய ஶைகள் திறம்பட நடைபெற்று வந்தன. இவ்வாறு ஆச்சிரமம் இயங்குவதை அறிந்த இந்திய மற்றும் வெளிநாட்டு சாதுக்கள், ஞானிகள், தபசுக்கள், சிவதொண்டர்கள் ஆகியோர் யாழ்ப்பாணம் வரும்போது மேற்படி ஆச்சிரமம் அவர்களுக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து ஆதரித்து சிவத்தொண்டாற்றி வந்துள்ளது.

எடுத்துக்காட்டு : குன்றக்குடி அடிகள், சுத்தானந்த பாரதியார், சத்தியானந்த சரஸ்வதி, சுவாமி சிவானந்த சரஸ்வதி, சுவாமி சச்சிதானந்த யோகிராஜ், கவாய் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி என இன்னும் பலர் சமூகமளிக்கும் காலங்களில் வடிவேல் சுவாமிகள் தலைமையில் உருத்திரபுரம், முரசுமோட்டை, வட்டக்கச்சி, முழங்காவில் போன்ற பல கிராமங்கள் தோறும் உபநியாசங்களும் பஜனைகளும் சமய பேச்சுக்களும் நடைபெற்று வந்துள்ளன. சாது முருகதாஸ் சுவாமிகளின் நிகழ்ச்சிகள் பல தடவைகளில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் இவ்வாச்சிரமம் ஒரு தர்மகர்த்தா சபையாக நீதி அமைச்சினால் SVP 104/44 of 29.10.1976 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இக்காலகட்டத்தில் ஒரு சில பெண்மணிகளும் பங்குவகித்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுள் பரமானந்தவல்லி அம்மையார் தனது இல்லற வாழ்வைத் துறந்து சுவாமிகளின் தீட்சை பெற்று ஆச்சிரமம் சீரும் சிறப்புடனும் நடைபெற உதவியுள்ளார். இவர் எந்நேரமும் சிரித்த முகத்துடனும் எந்த நாளாயினும் எந்நேரமாயினும் ஆச்சிரமத்திற்கு வருபவர்களுக்கு இல்லையென உணவு பரிமாறக் கூடியவராகத் திகழ்ந்துள்ளார். இவர் பற்றி அவர் காலத்தில் வாழ்ந்த சில தொண்டர்கள் மனதில் இன்றும் மறக்கமுடியாத அளவுக்கு பதிந்துள்ளது. இவரது சமாதிக் கோவில் உருத்திரபுரம் சிவன் கோவிலுக்கு அருகாமையில் கணேசானந்த சுவாமிகளால் அமைக்கப்பட்டுள்ளது.ஆச்சிரம வாழ்வுக்கு யாராவது வருவார்களோ என்று சுவாமிகள் தேடிய வண்ணம் இருக்க வயலின் வித்துவான் அல்வாய் ஆறுமுகம் அவர்கள் ஆச்சிரமத்திலே நின்று அவ்வாழ்வு முறையைப் பழகும் பொருட்டு தனது பிள்ளைகளைக் கொண்டு வந்து சேர்த்தார். இவர்களில் ஆ.சிவநாதன் ஆச்சிரமபஜைச, பண்ணிசை, கல்வி மற்றும் ஏனைய செயற்பாடுகளிலும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். தீட்சைகளைப் பெற்று சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகளில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று 1968இல் பட்டதாரியாகிய முதல் மாணவனாவார். இவர் இன்று ஒரு பாடசாலை அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். அதுமட்டுமன்றி இன்றும் ஆச்சிரம வாழ்வையும் அதன் நியதிகள்,பண்பாடுகள் மற்றும் தனது பற்றையும் பணியையும் மறவாது செய்து வருகின்றார். இவ்வாறு பல சிறுவர்கள் வளர்ந்து வருகின்றமையைக் காணமுடிகின்றது.

1958ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதியன்று யோக சுவாமிகளின் பூரண ஆசியுடன் அக்கால ஆச்சிரமத் தொண்டர்கள் சிலரின் முழு முயற்சியின் பயனாக கனகபுரம் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது கனகபுரம் ஓராம் பண்ணை, புதுமுறிப்பு வீதி புகையிரதக் கடவைக்கு அருகிலுள்ள அடர்ந்த காட்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகாலந்தொட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகள் தோறும் பகவத்கீதை வகுப்புக்கள் வடிவேல் சுவாமிகளால் நடாத்தப்பட்டு வந்தன. முதன் முதலாக காட்டின் நடுவேயுள்ள ஒரு இத்தி மரத்தடியிலேதான் நடாத்தப்பட்டது. பின்னர் ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் நடைபெற்றன. அதுமட்டுமன்றி

வருடாவருடம் சிவராத்திரி, வைகுந்த ஏகாதசி, திருவாதிரை மற்றும் பல மாதாந்த உற்சவங்கள் யாவும் ஆச்சிரமத்தில் நடைபெற்று வந்துள்ளன என்பது அக்காலத்தில் இருந்த இந்துப் பண்பாட்டின் சிறப்பைத் தெளிவுபடுத்துகிறது. திருவாதிரை அன்று ஆச்சிரமம் ஒரு புனித தலமாக விளங்கி வீதிகள் தோறும் திருவெம்பாவைப் பாடல்கள் பாடி பக்திமயமாக வலம்வரும் சிறுவர், சிறுமியரது காட்சிகள் எண்ணிலடங்காது எனக் கூறுகின்றனர். இவ்வழக்கம் இன்றும் தொடர்ந்து வருகின்றது.

ஆச்சிரம ஆரம்ப காலத்தில் உருவாக்கப்பட்டதே திருநெறிக்கழகம் என்ற சமய அமைப்பாகும். இதன்மூலம் அனேக பணிகள் கிளிநொச்சி பகுதியில் இடம்பெற்றன. ஏழாம் வாய்க்காலில் உள்ள இந்து மகா வித்தியாலயம் அக்காலப் பகுதியில் சைவ அபிவிருத்தி (கிளி இந்துபோட்) சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தில் காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவசுந்தரம், றங்கூன் சுப்பிரமணியம் பீடாதிபதி, ஸ்ரீமத் கணேசானந்தா, மு நல்லதம்பி, த. நல்லதம்பி, கதிரவேலு (குருகுல அப்பு) போன்றோர் முக்கிய பங்காற்றியுள்ளனர். இதில் இந்தியா வாரதா திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற கதிரவேலு ஆசிரியர் குருகுல அமைப்பினை வடிவேல் சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பித்து அதற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துள்ளார். குருகுலமும் ஆச்சிரமும் இணைந்து சைவப் பணிகளை முன்னெடுத்து வந்துள்ளன.

இந்து மகா வித்தியாலய மாணவர்கள் மகாதேவ ஆச்சிரம நிகழ்ச்சிகள் யாவற்றிலும் முழுமையாக ஈடுபட்டு வந்ததுடன் ஆத்ம ஈடேற்றம் பெற்று உய்வடைந்துள்ளனர். அவர்களுக்கு சமய தீட்சை மற்றும் திருமுறை வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு வருடாவருடம் நடாத்தப்பட்டுள்ளன. அத்துடன் திட்டமிட்ட ரீதியில் சமய அனுட்டான விதிமுறைகள் ஆச்சிரமத்தில் பின்பற்றப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டு :

- அந்தர்யோகம் சுவாமி அத்வயானந்த சரஸ்வதி அவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது.
- சுவாமி சச்சிதானந்தா யோகிராஜ் அவர்களால் யோகாசனப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சமய தீட்சைகள் மாதாமாதம், வருடாவருடம் நடைபெற்று வந்துள்ளன.

வடிவேல் சுவாமிகள் ஆச்சிரமம் என்பது 'ஆகச் சிரமமானது என்றும் அது வேதாகம விதிகளையும் புராண இதிகாச உண்மைப் பொருள்களையும் மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவதாக வாழ்ந்து காட்டி, அனுஷ்டிமான்கள் பலரை உருவாக்கும் ஒரு தெய்வ சபையாக இருக்கவேண்டும்' என்று அடிக்கடி கூறுவார். இவர்களில் இலங்கை மெய் கண்டார் ஆதீன தொண்டர் சுவாமிகளும் குறிப்பிடத்தக்கவர்கள். இதேபோன்று இவரிடம் ஞான உபதேசம் பெற்று காவி அணிந்து கொண்டவர்களில் பரமானந்த வள்ளி அம்மையார், யதீஸ்வரி ஆகிய பெண்களும் முக்கியமானவர்களாக விளங்குகின்றனர். தனக்குப் பின் கணேசானந்த சுவாமிகளே பீடாதிபதியாக வர வேண்டுமென்பதற்காக நாமம் சூட்டி பீடாரோகணம் செய்து வைத்தார்.

நல்லுள்ளம் படைத்த அவருடைய இறுதிக் காலத்தில் பல இடங்களிற்கு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் நோயுற்ற காலத்தில் ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகளே அதிகமாகக் கவனித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. தொடர்ந்து சுவாமிகள் 1990.06.26இல் சமாதியடைந்ததும் கணேசானந்த சுவாமிகளே பீடாதிபதியாகி திருமூலர் திருமந்திரத்தில் கூறப்பட்ட அளவுப் பிரமாணங்களின் படி சமாதிக் குகை அமைத்து அந்த ஒழுங்கு முறையில் சமாதி வைக்கப்பட்டுள்ளது. அவரது சமாதியில் சிவலிங்கம் பிரதிட்டை செய்து சமாதிக் கோவிலாக இருக்கின்றது. இவை அனைத்தையும் கணேசானந்த சுவாமிகளே திருவருள் துணையுடன் ஆற்றியுள்ளமையை வரலாறுகள் பகர்ந்து நிற்கின்றன.

வட்டக்கச்சி பிள்ளையார், வட்டக்கச்சி முருகன், முரசுமோட்டை முருகன், இரணைமடு கனகாம்பிகை அம்மன், ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் போன்றன இவ்வாச்சிரமத்தால் அடிக்கல் நாட்டப்பட்டவையாகும்.

இவ்வண்ணம் தொடர்ந்து கணேசானந்த சுவாமிகளின் அருளால் கிளிநொச்சி மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சைவசமய மரபுகளைப் பேணவும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. போர்க்காலச் சூழலால் அழிவுகளும் இடப்பெயர்வுகளும் ஏற்பட்டபோதும் குருநாதரின் அருட்கடாட்சத்தினால் மகாதேவ ஆச்சிரமம் புத்தாக்கம் பெற்று இவரது வழிகாட்டலால் அதன் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குருவருளின் பெரும் பேறே அன்றி வேறெதுவுமில்லை. அத்துடன் யுத்த காலத்தில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையால் அநாதரவான சிறுபிள்ளைகளை ஆதரிக்க எண்ணி புதுமுறிப்பிலுள்ள ஆச்சிரமக் காணியில் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை நடத்தி வந்துள்ளார். காலப்போக்கில் பிள்ளைகளின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் அதனை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட புறம்பான நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் திரு.இராசநாயகம் அவர்கள் தலைமைதாங்கி நடாத்தி வருகின்றார். அதற்கான நிர்வாக ஒழுங்குகள், வங்கிக் கணக்குகள் போன்றன தனியாக அமைந்துள்ளமையையும் காணமுடிகின்றது.

மேலும் இங்குள்ள சுவாமிகளில் மகாதேவ சுவாமிகளின் சீடர்களின் பெயர்கள் ஒவ்வொன்றும் அவர்களுடைய பெயர்களோடு 'மகாதேவ' என்று ஆரம்பிப்பதைக் காணலாம். உதாரணம் - கணேசானந்த மகாதேவ சுவாமிகள். ஆச்சிரமப் பணிகளை ஞானபோதக அனுஷ்டிப் பணிகளை ஏலவே இருந்த தர்மகர்த்தா சபையைப் புதுப்பித்து அச்சபையின் நிர்வாக ஒழுங்கிற்கமைய நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அதன் வங்கிக் கணக்கு இலக்கம் இலங்கை வங்கி – 70192774 ஆகும். நான் அங்கு சென்று பார்வையிட்டதனூடாக இன்றும் இங்கு பல சிறுவர்கள் கல்வி பயின்றும் நற்பண்புகளையும் பெற்று வருவதுடன் புதிதாக இணைந்து கொண்டும் வருகின்றதை காண நேர்ந்தது. இங்கு குருவழியில் யோகர் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், வடிவேல் சுவாமிகள், கணேசானந்த சுவாமிகள் போன்றோரது சமாதிகள், படங்களுடன் சிவனும் சக்தியும் உள்ளதாக கோவில் அமைத்து திருவருளும் குருவருளும் இணைந்து மகாதேவ ஆச்சிரமம் செயற்பட்டு வருகின்றது. குருபூசைத் தினங்கள் கொண்டாடப்படுவதுடன் பூசைகளும் கும்பாபிஷேக விழாக்கள் என அனைத்தும் முறைப்படி பக்தி சிரத்தையோடு அனுட்டிக்கப்பட்டு உணவுகள் கொடுத்து வருகின்றது. இவ்வாறு ஆச்சிரம காலந்தொட்டு இன்றுவரை பணியாற்றிய, பணியாற்றிக் கொண்டிருக்கும் தொண்டர்கள் பலர் உளர். எனவே மகாதேவ ஆச்சிரமத்தின் பணிகள் செவ்வனே இடம்பெற்று வருவது இந்துப் பண்பாட்டை முன்னிலைப்படுத்திக்காட்டுகின்றன.

**1.3. கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலையம்**

சித்தத்தைச் சிவன் பால் வைத்தவர்களே சித்தர்கள் ஆவர். அவர்களுள் ஈழத்துச் சித்தர்களில் பெருமை மிக்கவராகச் சிவயோக சுவாமிகள் கருதப்படுகிறார். இந்துமதம் இருக்கும் இடமெல்லாம் போற்றி வழிபடப்படும் இவர் தனது வாழ்நாளில் எண்ணற்ற பணிகளைச் செய்துள்ளார்.

ஈழத்தில் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியப் பொறுப்பாளராகப் பணியாற்றிய காலத்திலிருந்தே இவரது ஆன்மீகத் திறன்கள் உணரப்பட்டன. எம்மையே எமக்கு அறிவித்த சற்குருநாதனான யோகர் சுவாமிகள் மிகவும் எளிமையாக வாழ்ந்து மறைந்தவர். ஆடம்பரத்தையோ விளம்பரத்தையோ விரும்பாத ஒரு தலை சிறந்த சித்தர்.

தனக்குக் கீழ் பல சீடர்களை உருவாக்கி ஊரில் உள்ள சமயப் பற்றாளர்கள் பலருடன் இணைந்து சேவையாற்றியுள்ளார். உலகெங்கிலும் இவரது திருவடி நிலையங்கள் நிறைந்துள்ளன. இதிலிருந்து இவரது பணிகள் பறைசாற்றப்படுவதை நோக்கலாம். கிளிநொச்சியிலும் இவர் பணியாற்றிய திருவடி நிலையம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு யோகர் சுவாமிகள் முதியோர் இல்லம், பல்பொருள் வாணிபம் எனப் பல இவர் பெயரால் இயங்குகின்றன.

தொண்ணூறாம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தால் அழிவுக்குள்ளாகி மீண்டும் புத்துயிர் பெற்று விளங்குகிறது. யுத்த அவலங்களுக்குள் சிக்கி, மக்கள் அல்லற்பட்டு, இடம்பெயர்ந்து அகதிகளாக இலட்சக் கணக்கில் கிளிநொச்சி மண்ணில் தஞ்சமடைந்த வேளை இந்து மதத்தின் பெயரால் பல பணிகளை மேற்கொண்டது. இந் நிலையத்தில்

மகாசிவராத்திரி, திருவடிப்பூசை, சுவாமிகள் குருபூசை, திருவாதிரை முதலிய விசேட தினங்களில் திருவடிக்கு அபிடேகமும் சோடசோபசார பூசையும் நடைபெறும். சாதாரண நாட்களில் காலையும் மாலையும் யாக நாட்களில் மதிய நேரத்திலும் பூசை உண்டு. அத்துடன் புராணபடன முறை, வகுப்புக்கள் நடைபெற்றதுடன் மக்களுக்கான சுகாதார வசதிகள், சமையற் கட்டுகள், தங்குமிட வசதிகள் என பலவற்றைக் கொண்டு தன்னுடைய பணிகளை ஆற்றி வருகிறது.

காலத்தின் தேவையறிந்து அநாதரவான மூதாதையர்களைப் பராமரிக்க முதியோர் இல்லம் ஒன்றை அமைத்திட முன்வந்த போது பல கொடை வள்ளல்களும் அமைப்புகளும் பொது நிறுவனங்களும் ஒத்தாசை புரிந்தன. அவ்வளவு காலம் வரை ஓர் அரச முதியோர் இல்லமோ, தனியார் முதியோர் இல்லமோ இல்லாதிருந்த கிளிநொச்சியில் அன்றைய யுத்தகாலத் தெருவோர முதியோர்களை உள்வாங்கிப் பராமரிக்க இது உதவியது. இவ் இல்லம் அமைக்கப்பட்டு குறுகிய காலத்திலேயே அகில இலங்கை இந்துமாமன்றம் நிர்வாகச் செலவைப் பொறுப்பேற்றதுடன் சமையல் கூடத்தையும் களஞ்சியத்தையும் அமைத்துக் கொடுத்து இன்றுவரை இயன்ற உதவிகளைப் புரிந்துவருகிறது. வன்னேரிக்குளத்தில் ஐயனார்புரம் கிராமத்தில் முதியோர் இல்லத்தின் அருகாமையில் யோகர் சுவாமிதிருவடி நிலையம் ஒன்றையும் உருவாக்கியதுடன் இது போன்ற ஓர் வழிபாட்டு மண்டபத்தை கிளிநொச்சி நகரிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் இந்துமாமன்றத்தினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மனிதநேய நம்பிக்கை நிதியம் இன்று எமது முதியோர் இல்லத்தின் உணவு பராமரிப்புச் செலவுகளைப் பொறுப்பேற்றுத் தொடர்ந்து உதவிகளைச் செய்தும் வருகிறது. இதனால் அநாதரவான பல முதியோர்கள் இன்று பயன் பெறுகிறார்கள். அறநெறிப் பாடசாலைகளையும் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சுனாமி, யுத்தம் போன்ற அழிவுகளால் பாதிக்கப்பட்ட முதியோர்களைப் பராமரித்ததுடன் 2007 இல் கடந்த எட்டாண்டுச் சேவையை நிறைவுகொள்ளும் இத் திருவடி நிலைய முதியோர் இல்லத்திற்கு சமூக சேவை அமைப்பின் சிறந்த முதியோர் இல்லத்திற்கான விருதும் சிறந்த பராமரிப்பாளருக்கான விருதும் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றோடு யோகர் சுவாமிகள் முதியோர் இல்லம், இளைஞர் மன்றங்கள், கருணா நிலையம், உதவும் உறவுகள், சிவபூமி என வேறு சில நிறுவனங்களும் இப்பிரதேசத்தில் பல்வேறு சமய,சமூகப்பணிகளை ஆற்றி வருகின்றன என்றால் மிகையாகாது.

**அறநெறிப்பாடசாலைகள்**

| இல | அறநெறிப்பாடசாலைகள் பெயர் | இடம் | ஆசிரியர்கள் | மாணவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மாகாதேவாஆச்சிரமசிறுவர் இல்லம் அ.பா | ஜெயந்திநகர் | 02 | 35 |
| 2 | மாகாதேவாஆச்சிரமசிறுவர் இல்லம் அ.பா | புதுமுறிப்பு | 03 | 97 |
| 3 | ஸ்ரீ முருகன் இந்து இளைஞர் மளிதவளம் அ.பா | ஸ்கந்தபுரம் | 02 | 91 |
| 4 | குருகுலம் அ.பா | ஜெயந்திநகர் | 02 | 67 |
| 5 | ஸ்ரீ ரங்கநாதர் பெருமாள் கோயில்அ.பா | வட்டக்கச்சி | 04 | 40 |
| 6 | நாகதம்பிரான் அ.பா | உதயநகர் | 02 | 46 |
| 7 | திருநெறிக்கழகம் மாவடியம்மன் அ.பா | இமாநாதபுரம் | 01 | 30 |
| 8 | கலைமகள் அ.பா | பாரதிபுரம் | 02 | 68 |
| 9 | ஸ்ரீ சிவசித்திவிநாயகர் அ.பா | திருவையாறு | 02 | 45 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | ஸ்ரீ நந்தவனப்பிள்ளையார் அ.பா | இமாநாதபுரம | 02 | 55 |
| 11 | விக்னவிநாயகர் அ.பா | அக்கராயன்குளம் | 02 | 45 |
| 12 | கிருஸ்ணபாரதி.ஸ்ரீ முத்துமாரிஅம்மன் அ.பா | கிருஸ்ணபுரம் | 02 | 30 |
| 13 | ஸ்ரீஜெய துர்க்கைஅம்மன் அ.பா | ஆனந்தபுரம் | 02 | 40 |
| 14 | கனகாம்பிகைஅம்மன் அ.பா | அம்பாள்நகர் | 02 | 45 |
| 15 | மாவடிவயலூா் முருகன் அ.பா | இமாநாதபுரம | 03 | 50 |
| 16 | ஸ்ரீ முருகன் அ.பா | விவேகானந்தநகர் | 02 | 40 |
| 17 | பாமடிசித்திவிநாயகர் அ.பா | வட்டக்கச்சி | 01 | 30 |
| 18 | ஞானவைரவர் அ.பா | திருநகர் | 05 | 45 |
| 19 | பரமசிவன் அ.பா | இரத்தினபுரம் | 03 | 77 |
| 20 | சோதிவிநாயகர் அ.பா | வட்டக்கச்சி | 03 | 68 |
| 21 | ஸ்ரீ முத்துமாரிஅம்மன அ.பா | செல்வாநகர் | 01 | 25 |
| 22 | ஸ்ரீ சிவசித்திவிநாயகர் அ.பா | விநாயகபுரம் | 02 | 35 |
| 23 | ஊற்றுவிநாயகர் அ.பா | பன்னங்கண்டி | 02 | 40 |
| 24 | கந்தசாமிகோயில் அ.பா | வட்டக்கச்சி | 04 | 156 |
| 25 | ஸ்ரீ துர்க்கைஅம்மன் அ.பா | அம்பாள்குளம் | 02 | 56 |
| 26 | ஸ்ரீ முருகன் அ.பா | கனகாம்பிகைக்கும் | 02 | 75 |
| 27 | .ஸ்ரீ முத்துமாரிஅம்மன் அ.பா | ஊற்றுப்புலம் | 02 | 80 |
| 28 | மாணிக்கப்பிள்ளையார் அ.பா | உதயநகர் | 02 | 43 |
| 29 | .ஸ்ரீ முத்துமாரிஅம்மன் அ.பா | அம்பாள்நகர், சாந்தபுரம் | 04 | 140 |
| 30 | சுவாமிவிவேகானந்தர் அ.பா | ஆனைவிழுந்தான் | 03 | 91 |
| 31 | ஐயனார் அ.பா | வன்னேரிக்குளம் | 02 | 90 |
| 32 | பாலையடிவிநாயகர் அ.பா | உருத்திரபுரம் | 02 | 50 |
| 33 | ஆலடிவிநாயகர் அ.பா | இமாநாதபுரம் | 02 | 60 |
| 34 | நாவலடி ஸ்ரீ முருகன் அ.பா | கோணாவில் | 02 | 40 |
| 35 | சபரிஜயப்பன் அ.பா | வட்டக்கச்சி | 02 | 30 |
| 36 | சிவசித்திவிநாயகர் | கிளிநொச்சி | 02 | 36 |
| 37 | ஸ்ரீ நாகபூசணிஅம்மன் | கோணாவில் | 02 | 40 |

அட்டவணை – 02

| | | | | |
|---|---|---|---|---|
| 38 | உதிரவேங்கைவைரவர் | கனகாம்பிகைக்கும் | 02 | 85 |
| 39 | வரசித்திவிநாயகர் அ.பா | மலையாளபுரம் | 02 | 75 |
| 40 | கந்தசுவாமி அ.பா | கிளிநகர் | 02 | 30 |
| 41 | திருக்குழல் நன்மாதுமை சமேதகணபதீஸ்வரர் சிவன் அ.பா | வட்டக்கச்சி | 04 | 120 |

இங்கு 41 அறநெறிப் பாடசாலைகள் காணப்பட்டாலும் 60 சதவீதத்திற்குரிய குறிப்பிட்ட சிலதே அதிகபடியான அறப் பணிகளை இன்றும் செய்து கொண்டிருக்கின்றன எனலாம்.

**தற்கால மாற்றங்கள்**

இந்து நிறுவனங்கள் தற்காலத்தில் சில மாற்றங்களை எதிர்நோக்கி வருகின்றன. இந்து மதத்தைக் கடைப்பிடிப்பவர்களாலும் சரி, வேற்று மதத்தினராலும் சரி அவை ஏற்படுகின்றன எனலாம். இதனைக் கொண்டு பின்வரும் மாற்றங்களை இனங்காண முடிகிறது.

**01.இந்து நிறுவனங்கள் நவீனமயமாதல்**

ஆரம்பத்தில் இந்து நிறுவனங்கள் ஒரு சிறிய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் படிப்படியாக அவற்றின் தேவைகள் அதிகரிக்க இடப் பரப்பின் தேவையும் கூடுதலாகத் தேவைப்பட்டது. இதன்பொருட்டு தமது தேவைகளையும் மக்களின் தேவைகளையும் நிறைவேற்றிய வண்ணம் உள்ளன. காலப்போக்கில் தொழில்நுட்ப வளர்ச்சியால் இருந்த இடங்களிலேயே இருந்துகொண்டு தொலைபேசி, மின்னஞ்சல், இணையம் போன்றமூலம் தொடர்பு கொண்டு பணிகளை ஆற்றுகின்றன. இவை அவற்றின் வளர்ச்சிக்கு உதவினாலும் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் உள்ள நெருக்கமான தொடர்புகளை குறைக்கின்றன. சில பணிகளை நேரடியாகச் சென்று மேற்கொள்வதற்கும் இன்னொரு நபரின் ஊடாக மேற்கொள்வதற்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அத்துடன் மக்கள் ஆடம்பர வாழ்க்கையை விரும்பிச் செல்வதால் இந்துப் பண்பாடுகள் மாற்றம் பெறுகின்றன. தமது தேவைப்பாடுகளை நிறைவேற்ற இப்படியான அமைப்புக்களை நாடுவதும் இன்றைய காலத்தில் இப்பிரதேசத்தின் ஊடாக அவதானிக்க முடிகிறது.

**02.பணிகளைத் தொடர்ந்து செய்வதில் ஏற்படும் குறைபாடுகள்**

**2.1. மதக் கலப்பு**

இப்பிரதேசத்தில் யுத்த காலத்திற்குப் பிறகு வேற்றுமதக் கலப்புகள் அதிகம் இடம்பெறுகின்றன. பல்லினக் கலப்பால் சிலர் பிற மதக் கருத்துக்களை அதிகம் ஏற்று படிப்படியாக அம்மதத்தையே தழுவுகின்ற நிலை காணப்படுகின்றது. அத்தோடு திருமணம், நோய், வறுமை போன்ற காரணிகளும் துணைநிற்கின்றன. மாறாக இந்நிறுவனங்களின் சில தேவைப்பாடான ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளாத மனப்பாங்கு காணப்படுகின்றது. மேலும் பிற மதத்திற்கு மாறுகின்ற நிலையும் உள்ளது. இதனால் இந் நிறுவனங்கள் தமது பணியினை நல்ல முறையில் செய்ய முடியாத நிலையை இனங்காணலாம்.

**2.2.பண்பாட்டு மாற்றங்கள்**

பல்லினப் பண்பாட்டால் இந்துமதப் பண்பாடுகள்சீர்குலைக்கப்பட்டும் மாற்றப்பட்டும் செல்கின்றன. திருமணம், வறுமை போன்ற காரணிகளால் மதம் மாறுகின்ற போது அங்கு பண்பாட்டு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் ஒரு குடும்பத்திலேயே வெவ்வேறு மாற்று மணங்கள் நிகழ்ந்துள்ளன. நாகரீக வளர்ச்சியாலும் இம்மாற்றங்கள் ஏற்படுகின்றன. மக்களின் ஒற்றுமைத்தன்மை குறைவடைந்து ஏட்டிக்குப் போட்டியாக வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளது.இளைய சமுதாயத்தினர் இந்து மதக்கருத்துக்களை செவிமடுக்காது சினிமா, சுற்றுலா போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்துகின்றமை முக்கியமான விடயமாகும்.

எனவே இக் காரணிகளால் இந்து நிறுவனங்கள் அவற்றின் பணிகளை ஒற்றுமையாகவும் அமைதியாகவும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது.

**03. இடப்பற்றாக்குறை**

இந்து நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருந்த அல்லது அவை இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலங்கள் பறிபோவதால் அவற்றுக்கான இடப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. சொத்து ஆசை, நகர வாழ்க்கை மற்றும் சில நில அபகரிப்புகள் காரணமாக அமைகின்றன எனலாம்.

**04. மனிதவளம் குறைவடைந்து வருகின்றமை**

கால மாற்றத்திற்கேற்ப உள்நாட்டை விட்டு வெளிநாட்டிற்குச் செல்லல், தொழில் வாய்ப்பு, ஆடம்பர வாழ்க்கை போன்ற சில காரணிகளால் பணிகளை முன்னெடுத்துச் செல்ல ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்நிறுவனங்கள் சிலவற்றுள் கூடுதலாக வயது முதிர்ந்தோரே கடமையாற்றுவதைக் காணமுடிகிறது. இதனால் வலுவுள்ள சுறுசுறுப்பாக செயற்படக்கூடிய தன்மையை அவதானிக்க முடிகிறது.

**05. சிறந்த தலைமைத்துவம் அற்றுப்போதல்**

முன்னைய காலத்தில் மதப்பற்றுள்ளோரும் ஆன்மீகவாதிகளும் விரும்பி தம்மை அர்ப்பணித்து இந்நிறுவனங்களை உருவாக்கினார்கள். அதனால் சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்டு வழிநடாத்தப்பட்டன. பணிகள் பல மேற்கொள்ளப்பட்டு இந்து மதம் வளர்க்கப்பட்டது. சுயநலம், பணம், வசதிவாய்ப்பு போன்ற காரணிகளும் இதற்குச் சாதகமாக அமைகின்றன. கரைச்சி பிரதேசத்தில் வாழ்ந்த குருகுல அப்புஜிஎன்று சொல்லுமளவிற்கு அதிபராகக் கடமையாற்றியவர்கள் சேவை செய்து வாழ்ந்துள்ளனர். ஆனால் இன்று இப்படியான தலைவர்களைக் காண்பது அரிதாகவே உள்ளது.

இவ்வாறான சில மாற்றங்களை அல்லது சவால்களை இப்பிரதேச இந்துமத நிறுவனங்கள் எதிர்நோக்கி வருவதனை இனங்காணக் கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

தொன்றுதொட்டு பேணிவரும் இந்துப் பண்பாடு மக்களிடையே பல்வேறு விதங்களில் ஒன்றித்துக் காணப்படுகிறது. வழிபாடுகள், ஆலயங்கள், சடங்குகள், விழாக்கள் எனப் பல விதங்களில் பண்பாடுகள் வெளிப்படுகின்றன. அந்தவகையில் ஒரு சமூகத்தில் அதன் தேவைப்பாடுகளைக் கண்டறியவும் நிறைவேற்றிக் கொள்ளவும் அமைப்பு ரீதியிலான கட்டமைப்புகள் அவசியமாகின்றன. மக்களை அணுகிச் சென்று இலகுவான முறையில் பணிகளை மேற்கொள்ள நிறுவன அமைப்புகள் உதவுகின்றன. அதற்கேற்ப கரைச்சி பிரதேசத்தில் இந்து பண்பாட்டின் தன்மையை அறிய இந்து நிறுவனங்களும் துணை நிற்கின்றன. இவை சமய, சமூக ரீதியான பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றன.

மாணவர்களுக்கு கல்வி ரீதியிலான பணிகளை மேற்கொள்ளல், ஆதரவற்ற சிறியவர், பெரியவர்களுக்கு உதவுதல், ஆலயப் பணிகளை மேற்கொள்ளல், பராமரிப்பு இல்லங்களை அமைத்தல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்துக் கொள்ளல், பண்பாட்டு நிகழ்வுகளை நடாத்தி அவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற பணிகளை இந்து நிறுவனங்கள் இங்கு உருவாக்கம் பெற்ற காலத்தில் இருந்து இன்றுவரை ஆற்றி வருகின்றன.

இருப்பினும் காலத்தின் தன்மைக்கேற்ப இந்நிறுவனங்கள் தமது பணிகளை மேற்கொள்வதிலும் அதனை அணுகும் முறைகளிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. நிறுவனங்கள் நவீனமயமாவதால் பாரம்பரியம் நழுவுகின்றமை, பண்பாட்டுக் கலப்பு மற்றும் மக்களின் நாட்டம் குறைவடைகின்றமை போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். எவ்வாறிருப்பினும் இந் நிறுவனங்கள் தமது பணிகளை தொடர்ந்தும் செய்து கொண்டே இருக்கின்றன என்றால் மிகையாகாது.

**உசாத்துணைகள்**


1. Mukunthan.T, 2017, STATISTICAL HAND BOOK, Divisional secretariat, Karachchi.
2. அருள்சந்திரன்.மா., கேதீஸ்வரன்.றூ., 2014,**கிளிநொச்சி மாவட்ட தொன்மையின் மூலங்கள்**,மாவட்டச் செயலகமும், பண்பாட்டுப் பேரவையும், கிளிநொச்சி.
3. கணபதிப்பிள்ளை.க., 2016,**ஈழத்து வாழ்வும் வளமும்**, குமரன் புத்தக இல்லம்,கொழும்பு.
4. சிற்றம்பலம்.க.சி., 1993,**யாழ்ப்பாணம்: தொன்மை வரலாறு**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
5. சிற்றம்பலம்.க.சி.,**ஈழத்தமிழர் தொன்மை**,ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம், சென்னை.
6. சிவத்தம்பி.கா., 2000,**யாழ்ப்பாணம்: சமூகம்,பண்பாடு,கருத்துநிலை**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
7. சிவலிங்கராஜா.எஸ்., 2014,**யாழ்ப்பாணப் பண்பாடு :மறந்தவையும் மறைந்தவையும்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
8. **கரை எழில்**, 2013, 2014, 2016, கலாசாரப் பேரவையும், கரைச்சிப் பிரதேச செயலகமும், கிளிநொச்சி.